கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.109/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 35 |
| தந்தை பெயர் | கண்னையன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 19.03.2023 ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்து கடைக்கு தெருவிற்கு சென்றபோது மாங்குடி காளியம்மன் கோவில் தெரு ஆஜர் எதிரியின் வீட்டருகே போலீசார் விசாரணை சம்பந்தமாக வந்திருப்பதாகவும் கையெழுத்து வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதனால் நான் கையொப்பம் போட்டேன். பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். (பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அசா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 19.03.2023 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும், மாரியப்பன் என்பவரும் ஆஜர் எதிரியின் வீட்டு வழியாக சென்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த தாலுக்கா காவல் நிலைய உதவி ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.120/2023 ன் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகசரில் நானும், மாரியப்பனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .**

**இல்லை.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.109/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | வயது | 70 |
| தந்தை பெயர் | சிதம்பரம் | ஜாதி | |
| தொழில் | சலூன் கடை | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடியில் வசித்து சலூன் கடை வைத்துள்ளேன். அசா.1 எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு விவரம் எதுவும் தெரியாது. கடந்த 19.03.2023 ம் தேதி என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பத்தை போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அசா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 19.03.2023 ம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும், குமார் என்பவரும் ஆஜர் எதிரியின் வீட்டு வழியாக சென்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த தாலுக்கா காவல் நிலைய உதவி ஆய்வாளர் காவல் நிலைய குற்ற எண்.120/2023 ன் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகசரில் நானும், குமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .**

**இல்லை.**

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20 17:54:01 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்